<u>நகர் ஊரமைப்புத் துறை</u>

அனுப்புநர்
திரு. ...முகமது அலி, பி.இ.,எம்.பி.ஏ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
4, ஹக்கீம் அஜ்மல்கான் ரோடு,
சின்னசொக்கிகுளம்,
மதுரை-625 002.
Website :www.tn.gov.in/dtcp
mail ID : dydtcpmdurgn@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

71

ந.க.எண். 3855/2017 மம 3 நாள். 25.01.2018.

ஐயா,

பொருள் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - திண்டுக்கல் மாவட்டம் - பழனி வட்டம் - ஆயக்குடி பேரூராட்சி, கிழக்கு ஆயக்குடி கிராமம் -சர்வே எண்கள்.207/1பகுதி, 207/2 பகுதி, 207/3பகுதி, 209/1ஏ பகுதி மற்றும் 209/1பி பகுதி 1.65 ஏக்கர் (6660.00 ச.மீ) - பரப்பளவில் அமைந்த அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்தி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
2. அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13193/2017-LA2, நாள். 31.10.2017 மற்றும் 07.11.2017.
4. செயல் அலுவலர், ஆயக்குடி பேரூராட்சி கடிதம் ந.க.எண். 320/2017/ஆ நாள். 01.12.2017.
5. மனுதாரர் திருமதி.A.உமர்பருக், பழனி அவர்களின் Online விண்ணப்பம் நாள். 28.11.2017.

*****

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி பேரூராட்சி, கிழக்கு ஆயக்குடி கிராமம் -சர்வே எண்கள்.207/1பகுதி, 207/2 பகுதி, 207/3பகுதி, 209/1ஏ பகுதி மற்றும் 209/1பி பகுதி 1.65 ஏக்கர் (6660.00 ச.மீ) பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு பார்வை (1) மற்றும் (2)-ல் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் பார்வை (3)-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, பார்வை (4) மற்றும் (5)-ல் கண்டுள்ள விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பார்வை (2)-ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்ட திருத்திய விதிமுறைகளுக்கு ஏற்ப மேற்படி மனைப்பிரிவு வரைபடம் Layout Frame Work-வரைபடத்திற்கு **ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண். 26/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காண் விபரம் மற்றும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பளவு | - 1.65 ஏக்கர் (6660.00 ச.மீ) |
| ஒதுக்கிய மனைகள் | - 33 **எண்ணம்** |
| பூங்கா | - 486.10 ச.மீ (10.29%) |

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 13.10.2017-ன்படி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசீலனை கட்டணம் 11 மனைகளுக்கு (மனை எண்கள். 18 முதல்

23, 28 முதல் 31 மற்றும் 33) மட்டும் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 22 மனைகளுக்கு மனைக்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் பெறப்படல் வேண்டும்.

2. **வரன்முறைப்படுத்துதல் கட்டணம்** ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக் ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்) வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

   **Regularisation Charges Head of Account**
   0217 Urban Development - 60 other Urban Development Schemes -
   800 Other receipts AT Receipt under Regularisation Charges of
   Unapproved layout and Plots - DTCP
   (DPC : 0217 60 800 AT 0007)
3. **வளர்ச்சிக் கட்டணம்** ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 75/- (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. மனைப்பிரிவில் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றில் மாற்றம் ஏதும் இருப்பின் சரியான விபரங்கள் குறிப்பிட்டு திருத்திய மனைப்பிரிவிற்கு விண்ணப்பித்து உரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
5. As per G.O. Ms.No. 172, Housing and Urban Development Department dated. 13.10.2017, All the layout road and open space reservation area in the layout as shown in the layout framework shall be deemed to have been vested with the concerned local authority.
6. இம்மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் பகுதியினை வருவாய் உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் உரிமையில் வழங்க நில அளவைத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. தனிமனைகள் உள்ளாட்சியில் முறைப்படுத்தப்படும் போது நிலஉரிமம் மற்றும் மனை அளவுகள் ஆகியவற்றை ஆவணங்களின்படி உறுதி செய்து தனிமனைகள் முறைப்படுத்தப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்படும் இம்மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு மனையினையும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை பெற்று உள்ளாட்சியில் வரண்முறைப்படுத்தப்பட்ட பின்னரே தனி மனைகளை பத்திரப்பதிவு செய்யப்பட வேண்டும்.

தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒரு தொகுப்பு உரிய நடவடிக்கை தொடரும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மதுரை மண்டலம்.

**இணைப்பு**
மனைப்பிரிவு Frame work வரைபடம் -1.

**நகல்**

1. திரு.A.உமர்பருக் மற்றும் இருவர், த/பெ.T.A.அப்துல் வகாப், 1A, 8வது வார்டு, திண்டுக்கல் ரோடு, புது ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம். — கடித நகல் மட்டும்.
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம், திண்டுக்கல். — சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.(வரைபடம் -
3. சார் பதிவாளர், பழனி 1 சார்பதிவாளர் அலுவலகம், பழனி, திண்டுக்கல் மாவட்டம். — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.(வரைபடம் - 1)
4. தொழில்நுட்ப வைப்பறை - 1 வரைபடம்.

ந.க. எண் :- 453/2018/அ3

**திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சி 19.07.2018ம் தேதி நடைபெற்ற கூட்டத்தின் உண்மை நகல்**

திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சிக்குட்பட்ட கிழக்கு ஆயக்குடி கிராம சர்வே எண்கள் 207/1 பகுதி, 207/2 பகுதி, 207/3 பகுதி, 209/1ஏ பகுதி மற்றும் 209/1பி பகுதி நிலப்பரப்பு உள்ள இடத்தை மனையிடங்களாக பிரித்து மனையிடங்களை வரன்முறைப்படுத்த அங்கீகாரம் வேண்டி மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களிடம் நேரடியாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை ஆவணங்களை பார்வையிட்டு தேசிய நெடுஞ்சாலையில் இருந்து பேரூராட்சி சாலை வழியாக பிரிந்து செல்கிறது. மேற்படி சாலை ஆயக்குடி பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மனைப்பிரிவைச் சுற்றிலும் சுடுகாடு, இடுகாடு, நீர்நிலைகள் ஏதுமில்லை. மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கு உரிய ஆவணங்களுடன் இவ்வலுவலக கடிதம் வாயிலாக தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மனுதாரர் திரு.ஏ.உமர்பாரூக் த/பெ.டி.ஏ.அப்துல்வகாப், 8வது வார்டு புதுஆயக்குடி அவர்கள் தனக்கு சொந்தமான நிலத்தில் உள்ள மொத்த இடத்தில் 6660 ச.மீட்டர் பரப்பளவு உள்ள மனையிடத்திற்கு ம.வ.(மு) /ந.ஊ.து.இ.(மம) எண். 26/2018/ என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்' (பொ) மதுரைமண்டலம், மதுரை அவர்களின் நடவடிக்கையில் அனுமதியற்ற மனைப் பிரிவு முறைப்படுத்தி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள மனையிடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தின்படி மொத்த மனைகள் 36, அதில் ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 34, விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 2 ( 1 மற்றும் 2 ) விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை 33 எண்ணம் ( 3 முதல் 33 முடிய ) ஆகும். ஒதுக்கப்படாத மனை எண் 34 ஐ பொது திறவெளி ஒதுக்கீடாக ( OSR ) இடத்தின் பரப்பளவு 486 ச. மீ. உள்ள இடத்தினை பேரூராட்சிக்கு பூங்கா அமைப்பதற்கும், மனையிடத்தின் வழியாக செல்லும் 6.10 மீ அகலமுள்ள பொதுபாதையும், பழனி நிர் இணை சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.1193/2018 நாள்.23.05.2018 ம் தேதியில் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பத்திர நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனையிடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 6.10 மீட்டர் அகலமுள்ள சாலைகள் அனைத்தும் பேரூராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. நகல் கோப்பில் உள்ளது. ஆகவே, மேற்படி விற்கப்படாத 33 மனையிடத்திற்கு இறுதி அங்கீகாரம் வழங்க வேண்டியுள்ளது. மன்றஅனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதி வழங்கும் விசயம்.

<u>செயல் அலுவலர் குறிப்பு –</u>

மனுதாரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பொதுபாதை மற்றும் பூங்கா இடத்தினை ஏற்றுக்கொண்டு மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்தி தொழில்நுட்ப ஒப்புதலினை ஏற்று 33 மனையிடங்களுக்கு பேரூராட்சி மன்றம் மூலம் இறுதி அங்கீகாரம் வழங்கிட முன் அனுமதி வழங்கிடலாம்.

**தீர்மானம்**

நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளபடி அங்கீகாரமற்ற மனையிடங்களை அரசு விதிகளின் படி அங்கீகரிக்க தீர்மானிக்கப்படுகிறது.

(ஒம்)××××××
தனி அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி.

ஆயக்குடி பேரூராட்சி PIN 624 613 திண்டுக்கல் மாவட்டம்

/ உண்மை நகல் /

13/1/2022

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.-624 613.

13/1/2022